**செய்தி வெளியீடு எண். 685** **நாள்.6.10.2009**

**தமிழக அரசின் சார்பில் தியாகசீலர் கக்கன் நூற்றாண்டு விழா 10.10.2009 (சனிக்கிழமை) அன்று மதுரையில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.**

தமிழக அரசின் சார்பில் "தியாகசீலர் கக்கன் நூற்றாண்டு விழா" மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், தும்பைபட்டியில் 10.10.2009 (சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கு மிகச் சிறப்புடன் நடைபெற உள்ளது.

10.10.2009 (சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு கலைமாமணி புஷ்பவனம் குப்புசாமி குழுவினரின் நாட்டுப்புற நல்லிசை நடைபெறுகிறது.

இவ்விழாவில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ந.மதிவாணன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையுரையாற்றுகிறார்கள்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.ஆ.தமிழரசி அவர்கள் முன்னிலை உரையாற்றுகிறார்கள்.

மாண்புமிகு மத்திய இரசாயணம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்கள், தியாகசீலர் கக்கன் திருவுருவப் படத்தை திறந்து வைத்து, தியாகசீலர் கக்கன் நூற்றாண்டு நினைவு நுழைவு வாயில் அடிக்கல் நாட்டி விழாப் பேருரையாற்றுகிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.ப.மாணிக்கத்தாகூர், திரு.ஜே.எம்.ஆருண், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.சாமி, திரு.பி.மூர்த்தி, திரு.எஸ்.எஸ்.கௌஸ்பாட்ஷா, திருமதி.லதா அதியமான், திரு.கே.எஸ்.கே.இராஜேந்திரன், திரு.என்.நன்மாறன், திரு.சி.துரைராஜ், திரு.ஏ.கே.போஸ், திரு.ஐ.மகேந்திரன், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத் தலைவர் திரு.கே.பி.டி.கணேசன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.பி.அசோக் குமார், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திரு.பி.திலகரசு, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் திரு.எம்.ஏ.அயூப்கான், மதுரை வேளாண் விற்பனைக்குழு தலைவர் திரு.வி.பி.பாண்டி, தும்மைபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.சந்திரா பழனியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றுவார்கள்.

இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இவ்விழாவிற்கு அனைவரும் வருகைதந்து விழாவினை சிறப்பிக்கும்படி செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்கள் அன்புடன் அழைப்பு விடுக்கிறார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9